விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 355 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 23 சனிக்கிழமை (09.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## கரையோர காணிகளை சுவீகரிப்பதை எதிர்த்து
### பொன்னாலையில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ள நிலையில் அதைக் கைவிடுமாறு வலியுறுத்தி பொன்னாலை சந்தியில் கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 15

### வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை
## பிரதான சந்தேகநபர்களை சாட்சி அடையாளம் காட்டினார்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, சந்தேகநபர்களான நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் வழக்கின் பிரதான சாட்சி நேற்று வெள்ளிக்கிழமை அடையாளம் காட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அது தொடர்பி 15

# தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்
### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

"தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்பட வேண்டும். மேலும் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் நிலையில் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும்" என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் சபையுடன் இணக்கமாகச் செயற்படுகின்றோம். 16

### 200 மில்லியன் இலங்கைக்கு சலுகைக் கடன்

(கொழும்பு)

இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகைக் கடனை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார 15

### தபால் சேவை மீண்டும் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

தபால் சேவைகள் மீண்டும் முடங்கும் அபாய நில உருவாகியுள்ளது.

ஒன்றிணைந்த 15

## இனப் பிரச்சினையை ஒன்றிணைந்து தீர்ப்பது தொடர்பான யோசனை
### உலகத் தமிழர் பேரவையினரால் மகாநாயக்க தேரர்களிடம் எடுத்துரைப்பு



(கொழும்பு)

நாட்டில் நீடித்து வரும் இனப்பிரச்சினையை ஒன்றிணைந்து தீர்ப்பது தொடர்பான யோசனைகள் உலகத் தமிழர் பேரவை 15


## சாவகச்சேரியில் இரு தரப்புக்கு இடையே மோதல் சம்பவம்
### 3 பெண்கள் உட்பட 7 பேர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியை அண்மித்த குடியிருப்பு பகுதி ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மோதலில் ஈடுபட்ட 3 பெண்கள் உட்பட ஏழு பேர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக குறித்த கைது நடவடிக்கை 15

## அடுத்த வருடம் தேர்தல்
### ஜனாதிபதி ரணில் மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலும், அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் என்பன நடைபெறும் என ஜனாதிபதி ரணில் 15

## நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நிலைமாறுகால நீதி மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு முக்கியமான படியாக, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்மொழியப்பட்ட ஆணைக்குழு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்படவுள்ளதோடு, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்தாலோசித்து குறித்த சட்டமூலம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டமூலம் தொடர்பாக பொது மக்களிடம் இருந்து கருத்துக்களைப் பெறும் வேலைத் திட்டம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 09 - 1951

மறைவு 07 - 12 - 2023

## சறோஜா சற்குணசிங்கம்

வீமன்காமம் K.K.S வீதி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, மாவிட்டபுரம் தெல்லிப்பளை மற்றும் (இல.46, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை) வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜா சற்குணசிங்கம் அவர்கள் கடந்த 07.12.2023 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - தங்கம்மா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சற்குணசிங்கம் (பொறியியலாளர் - மின்னியல், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஏழாலை களவாவோடை கருணாகரப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபைத் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும் சயந்தன் (லண்டன்), சதீஷன், சதீனா ஆகியோரின் அன்புத் தாயாரும் பகீரதன் (பதிவாளர் நாயகத் திணைக்களம், கச்சேரி யாழ்ப்பாணம்), ஜனார்த்தனி (லண்டன்), சிந்துஜா (ஆசிரியர் - மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜித், சஞ்சித், தங்கேஷ், மதுஷ்சன், கருணி, சுரேன், மேனகா, துர்க்கா, காலஞ்சென்ற மயூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பொன்னம்மா மாரிமுத்துவின் பெறாமகளும் செல்லையா, செல்லத்துரையின் பெறாமருமகளும் பிறேமா (சுசீலா - கனடா) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை இல.46, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(18161)

இல.46, சம்பியன் கிழக்கு, கொக்குவில்.
077 715 0356, 077 523 4993, 077 990 0041
தகவல்: குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : (18155)

077 882 8638

## பணியாளர்கள் தேவை - (ஆண்கள்)

கொழும்பில் இயங்கிவரும் பலசரக்கு விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் உடனடியாகத் தேவை.

குறிப்பு – தங்குமிடம், உணவு வழங்கப்படும். (18166)

077 755 4528

208 A, Galle Road, Wellawatta.


## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம்,



பதிவு இலக்கம் : 9583 (தலைமையகம்)

40, முனீஸ்வரன் வீதி (யாழ்ப்பாணம்)

# அறிவித்தல்

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.இ.விஜயராசா அவர்கள் தலைமையில் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தரவும்.

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. விருந்தினர்கள் கௌரவிப்பு
3. வரவேற்புரை
4. தலைவர் தலைமையுரை
5. பொதுக்கூட்ட அறிக்கை, ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
6. வரவு, செலவு அறிக்கை சமர்ப்பித்தல் (2023 தை தொடக்கம் கார்த்திகை வரை)
7. அங்கத்துவர் கருத்துரை வழங்கல்
8. விருந்தினர்கள் உரை
9. 2023ஆம் ஆண்டு நிர்வாக குலைவு.
10. 2024ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு.
11. எதிர்கால செயற்பாட்டிற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளல்.
12. நன்றியுரை

சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

(18147) நன்றி நிர்வாகம்

# மரண அறிவித்தல்



## கதிரவேலு பஞ்சலிங்கம்

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

யாழ். மானிப்பாய் வடகிழக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பஞ்சலிங்கம்(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்) அவர்கள் 06.12.2023 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - தில்லையம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தமுத்து - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மல்லிகாதேவி(பவுண்) அவர்களின் பாசமிகு கணவரும் அமரர்களான திருநாவுக்கரசு(அதிபர்), கணேசு(அதிபர்), இராசலிங்கம், புனிதவதி மற்றும் சரஸ்வதி, செல்வராணி, தங்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா, புஸ்பராசா, சுந்தரலிங்கம், பத்மாதேவி, சந்திராதேவி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகிறதி(தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்), வினோபா(பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்), அமலன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலநாத்(தேசிய சேமிப்பு வங்கி பிராந்திய காரியாலயம் யாழ்ப்பாணம்), அஜந்தன்(பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), கீர்த்திகா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தன்ஜா, லிசானிக்கா, தியான்சி, அயனா, கைலன்(லீமா), ஆதியா அகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் வடகிழக்கு மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய். (18159)

தகவல் - குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 01 . 1945

இறப்பு 06 . 12 . 2023

## மாணிக்கம் உதயகுமார்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர், றொட்றி முன்னாள் கிராமக் குழுத் தலைவர்)

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு அன்னங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் உதயகுமார் அவர்கள் கடந்த 06.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் கணபதி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் பாசமிகு கணவரும் சிவகுமார்(சிவன்-கொலண்ட்), மோகனா(ஜேர்மன்), கெங்காதரன்(ஜேர்மன்), கௌரிதரன்(சுவிஸ்), சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இலக்கணகுமார் (ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்), சுப்பிரமணியம்(தயா), குணசிங்கம்(அப்பன்-கனடா), தேவராணி, காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பவளம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்டும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(18162)

தகவல் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறிவிட்டது -பீரிஸ் சாடல்

**(கொழும்பு)**
**புதிய சட்டம் உருவாக்கப்படும் வரை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தப் போவதில்லை என சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங் கம் மீறி விட்டதாக முன்னாள் வெளிவிவகார அமை ச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறி. தமக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் வாக்குறுதியை மீறி விட்டு புதிய வாக்குறுதிகளை வழங்கினால் அதனை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளாது என்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்படுகிறோம் என்று பேச்சளவில் குறிப்பிடுவதால் மாத்திரம் முன்னேற்றமடைய முடியாது என்றும் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிடும் சூ

ழலை நல்லாட்சி அரசாங்கமே உருவாக்கியது என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (நி-5-6)

## தனிநபரின் வரிச் செலவு பாரியளவில் உயரும்

(கொழும்பு)

அரசாங்கம் விதிக்க உத்தேசித்துள்ள வரிகள் காரணமாக, ஒருவர் 2024ஆம் ஆண்டில் மேலும் 30,000 ரூபாவை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்த வேண்டியிருக்கும் என வழிகள் மற்றும் வழிமுறைகள் குழு வெளிப்படுத்தியுள்ளது.

2020ஆம் ஆண்டுடன் ஒப் பிடும் போது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒரு இலட்சம் ரூபா வரி செலுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது. எனினும் 179 பில்லியன் வசூலிக்கப்படாத வரிகள் இருப்பதாகவும் குறிப பிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் பிரகாரம் வங்கிக் கணக்குகள் அல்லது சொத்துக்களிலிருந்து மேற்படி வரிகளை உடனடியாகப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழிகாட்டுதல்களை குழு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

### சித்தார்த்தன் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடிப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது. மிக அண்மையிலே தமிழ் நாட்டிலே இருந்து நூற்றுக்கணக்கான ரோலர்கள் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

இந்திய மீனவர்கள் வருகை தடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தடுக்கப்படாவிட்டால் எங்களுடைய கரையோரங்களில் வாழக்கூடிய மீனவ சமூகத்தினுடைய முழு வருமானமும் இல்லாமல்போகும். அவர்கள் ஒரு வறுமைக்கோட்டின் கீழ் செல்லக்கூடிய ஒரு நிலைமை உருவாகிக் கொண்டு வருகின்றது.

கொள்கை ரீதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருக்கக்கூடிய உறவைக் கொண்டு இவ்விடயத்தைச் சீர்செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து அவலத்தை தீருங்கள்

## சிறீதரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

நெடுந்தீவு பிரதேசம்தனித்த ஒருதீவாகக் காணப்படுகின்றது. அங்கு செல்வதற்கான பேருந்து சேவையும் படகு சேவையும் பலவீனமான நிலையில் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இருந்து 16 கடல் மைல் தொலைதூரத்தில் இந்தத் தீவு உள்ளது. இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஒரு பேருந்து மாத்திரம் சேவையில் உள்ளது. அதுவும் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்டது. அது பழுதடைந்தால் அன்றைய தின போக்குவரத்து சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையும். இன்னுமொரு பேருந்தையாவது வழங்குமாறு பல தடவைகள் வலியுறுத்தியும் தீர்வு கிடைக்கவில்லை.

அதேபோல் படகுச் சேவையும் பலவீனமான நிலையில் உள்ளது. வடதாரகை கடந்த 4 மாதகாலமாக சேவையில் இல்லை. நெடுந்தாரகை மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. குமுதினி படகுச் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு 6 முறையிலான படகுச் சேவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவில் சுமார் 5000 பேர் வாழ்கிறார்கள். போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு பிரச்சினைகளால் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என சிறீதரன் எம்.பி தெரிவித்தார். (நி-5-6)

# கூட்டு இமாலய பிரகடனம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

உலக தமிழ் மன்றமும்,முக்கிய பௌத்த துறவிகளும் நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கூட்டு இமாலய பிரகடனத்தை அவர்கள் ஜனாதிபதியிடம் கையளித்ததாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

சமூக நல்வாழ்வை முதன்மைப்படுத்தும் பன்மைத்துவ இலங்கையை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் வரலாற்றுத் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்வது, பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறித்தும் குறித்த பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)

# வருடாந்த பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி

## புள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் தொடர்பான தரவு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி இவ்வருடம்ஜூலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில், பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 68 ஆயிரத்து 920 ஆகக் குறைந்துள்ளது.

ஆனால், 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 321 என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 2021 ஆம் ஆண்டில், பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 848 ஆகவும் 2020 இல் 3 இலட்சத்திற்கும் அதிகமான பிறப்புகளும் பதிவாகியுள்ளன.

இதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு பிறப்பு பதிவு 6 ஆயிரத்து 401 ஆக குறைந்துள்ளதுடன், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41 ஆயிரத்து 786 பிறப்புகள் குறைந்துள்ளன.

இந்நிலையில், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள், பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாடு முறைகள், உலகளாவிய தொற்றுநோய்கள் போன்ற காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள மக்கள் தயக்கம் காட்டுவதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்


## தேசியமட்ட தடகள போட்டி விஸ்ணுப்பிரியன் வெண்கலம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்ட தடகள போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் ஜெ.விஸ்ணுப்பிரியன் வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட 34ஆவது தேசியமட்ட தடகள போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் ஜெ.விஸ்ணுப்பிரியன் 39.06 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-60)




## தென்னாபிரிக்காவில் பட்டிங் செய்வது கடினம்- டிராவிட்

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்க மண்ணில் மட்டும் இதுவரை டெஸ்ட் தொடரை வென்றதில்லை இந்த மாத கடைசியில் அந்த நாட்டுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா விளையாட உள்ள நிலையில் பட்டிங் செய்வதற்கு சவாலான இடம் தென்னாபிரிக்கா என்று இந்தியஅணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.இது குறித்து டிராவிட் கூறியதாவது.

பட்டிங் செய்வதற்கு சவாலான இடம் தென்னாபிரிக்கா என்பதை புள்ளிவிபரங்களே சொல்லும். குறிப்பாக இங்குள்ள வேகப்பந்து வீச்சுக்கு உகந்த செஞ்சூரியன். ஜோ கன்னஸ்பர்க் ஆடுகளங்களில் ரன் குவிப்பது சுலபமல்ல. ஒவ்வொரு பட்ஸ்மேனும் இங்கு எப்படி விளையாடவேண்டும் என்ற திட்டமிடலுடன் வருவார்கள். அதற்கு ஏற்ப பயிற்சியும் மேற்கொள்வார்கள்.

நமது வீரர்களுக்கு எப்படி ஆடினால் கைகொடுக்கும் அதை எப்படி களத்தில் செயற்படுத்த வேண்டும் என்பதில் தெளிவான நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

களத்தில் நிலைத்து நிற்க வாய்ப்பு அமைந்து விட்டால்,அதை வெற்றிக்குரிய இன்னிங்சாக மாற்ற முயற்சிக்க வேண்டும். என கூறியிருந்தார்.

(நி-5-6)



## இங்கிலாந்து மகளிர் வெற்றி

மகளிர் இந்திய அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இங்கிலாந்து அணி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மற்றும் இந்தியா மகளிர் அணிகளுக்கு இடையிலான குறித்த முதல் போட்டி மும்பையில் நடந்தது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 197 ஓட்டங்கள் குவித்தது. வையட் 47 பந்துகளில் 75 ஓட்டங்களும் (2 சிக்ஸர், 8 பவுண்டரிகள்), நட் சிவர் 53 பந்துகளில் 77 ஓட்டங்களும் (13 பவுண்டரிகள்) எடுத்தனர்.

களமிறங்கிய இந்திய அணியில் ஸ்மிரிதி மந்தனா (6), ஜெமிமா (4) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் தொடக்க வீராங்கனை ஷஃபாலி வெர்மா அரைசதம் விளாசி 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வந்த வீராங்கனைகளால் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாததால் இந்திய அணி 159 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியுற்றது.(நி-5-6)




## ஆஸி.டென்னிஸ் தொடரில் நிக் கிர்கி யோஸ் விலகல்


அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஆடவருக்கான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நிக் கிர்கியோஸ் கலந்து கொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற விம்பிள்டன் இறுதிப் போட்டியாளர் காயத்தால் பாதிக்கப்பட்ட அவர் தொடர்ந்து ஓய்வு பெற்று வருகின்றார்.

28 வயதான அவர் முழங்கால் காயத்தால் கடந்த ஆண்டு கிராண்ட் ஸ்லாமை போட்டியில் விளையாடும் வாய்ப்பினை இழ ந்திருந்தார்.

இதேநேரம் ஜனவரி முதல் வார த்தில் பிரிஸ் பேனில் இடம் பெறும் அவுஸ் ரேலிய டென்னிஸ் தொடரில் பங்கேற்பதாக ரபேல் நடால் அறி வித்துள் ளார்.

22முறை கிராண்ட்ஸ் லாம் சம்பியன் பட்டங்களை வென்ற ரபேல் நடால், 2023 ஆம் ஆண்டு அவு ஸ்தி ரேலிய பகிரங்க டென் னிஸ் தொடரின் பின்னர் போட்டிகளில் பங் கேற்கவில்லை என்பது குறி ப்பிடத்தக் கது.(நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி வேட்பாளராக நால்வரை களமிறக்க திட்டமிடும் மகிந்த அணி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களாக இதுவரையில் மூன்று பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவினால் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் கட்சியின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.இதுவரையில் மூன்று பேரின் பெயர்கள் பொருத்தமான வேட்பாளர்கள் பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.பசில் ராஜபக்ஷ. தம்மிக்க பெரேரா. நாமல் ராஜபக்ஷ ஆகியோரே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த வேட்பாளராக நிறுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மீண்டும் தீர்மானிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் ஆனால் அது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய. பசில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான மேலதிக கலந்துரையாடலின் பின்னர் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என உள்ளக தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)



உ
ஓம் நமசிவாய

# ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் வேம்படிப் பிள்ளையார் மகா கும்பாபிஷேகம் (நாளைய தினம்)

**முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே- மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ்சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்.**

**கும்பாபிஷேகம் காண்போர் குவலயத்தில் உயர்ந்து வாழ்வார்**

ஓங்காரத்தை உச்சரித்தால் உயர்வுறுவர், உயர்கதி பெறுவார், ஓங்கார ஒலி உயிர்க்குற்றங்களை அகற்றுகிறது. இறைவனடியில் ஆன்மாவைச் சேர்ப்பிக்கிறது.

ஓம்காரம் இறைவனை உணர்த்தும் ஒலி, இறைவனை உணர்த்தும் சொல், தியானித்தால் பேரின்ப நிலை எய்தலாம்.

பிள்ளை என்றாலே மகன் தான். பிள்ளையார் என்றால் தலைசிறந்த மகன்.

"பிடியதன் உருஉமை கொளமிகு கரியது" பிடி என்றால் பெண் யானை, கரி என்றால் ஆண் யானை. இங்கு பிடியின் உருவத்தை உமை அமைப்புக் கரியின் உருவத்தை சிவன் அமைப்பு.இவ்வுருவுகள் கொண்ட சிவனும் உமையும் அடியவர் வினைதீர்க்க விளைந்தனர்.பிள்ளையாரைப் பெற்றனர்.

**பிடியதன் உரு உமை கொள, மிகுகரியது
வடி கொடு, தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே**

***சம்பந்தர் தேவாரம்.***

ஔவையார் அம்மா, ஆடிச்சுவாதி அன்று, சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான் நாயனார், கையிலாயம் போவதை கண்டார்.உடன் தானும் கையிலாயம் போகவேணும் என பிள்ளையார் பூசையை அவசரமாகச் செய்ய அங்கு அதிசயம் அற்புதம் "பிள்ளையார் அசரீரி பூசையை அமைதியுடன் ஆறுதலாகவும் பக்தியுடன் செய்" இந்த வரி நமக்கும் வழிகாட்டல். அம்மாவும் அவ்வாறு செய்து,அருள் வழியில் நமக்கும் கிடைத்த ஓர் பெரும் பொக்கிசம் "விநாயகர் அகவல்" 72 திருவரிகள் அடங்கியது.

விநாயகர் அகவல் ஓதி சிறப்பாக நிறைவு செய்ய,தும்பிக்கையால் சுந்தரர், சேரமானுக்கு முன்னதாகக் கையிலாயம் சேர்ப்பித்தார். "ஓம் கணபதியே நம" திருமூலர் திருமந்திரத்தில் "ஐந்து கரத்தனை, யானை முகத்தனை" பிள்ளையாரின் வடிவத்தில் "ஓர் கை பற்றுள்ளதைப் பிறப்பிப்பதும், பிணித்து நிற்பதும், படைத்தலைக் குறிக்கும்.

பாசத்தை குறிக்கும் முதலாவது கை ஆகும்.

பிறவி எடுத்தாலே இன்ப துன்ப வினை மாறி, மாறி சூழ நாம் இறைவனை வழிபட்டு விடுபட அஞ்சேல் எனப் பாதுகாக்கும் கை அபயக்கை இரண்டாவது.

அழித்தல் தொழிலை செய்யும் அங்குசம் தாங்கிய மூன்றாவது கை.

பிள்ளையாரே அபயம் என உயிர்கட்கு அருளைச் செய்வது, மோதகம் ஏந்திய கை, கீழ் நோக்கிய பிறவிக்கு அஞ்சி வழிபடும் உயிர்களுக்கு, அடையுமிடமாகிய திருவடியாகிய முத்திப்பேறு அருளுவது.

துரோதானமாகிய மறைத்தல் தொழிலைச் செய்வது தும்பிக்கையே.

இடதுகொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலதுகொம்பு பாசஞானத்திற்கு உரியது.

உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் இரு சுளகு போன்ற செவிகள் காக்கின்றன.

பிள்ளையாரின் இரண்டு கண்களுடன் நெற்றிக்கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாக உள.

அறியாமை என்றும் இருள்தேய, ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி செய்வார் என்பதனை முடியில் உள்ள பிறை உணர்த்துகிறது.


உருவமற்ற நீர்,கும்பத்தில் ஊற்றும் போதே கும்பத்தின் வடிவைப் பெறுவது போல **எம் பெருமான் பிள்ளையார், உயிர் மீது உள்ள கருணையினால் அன்பான உருவம் ஆகிறார்.** பஞ்சபூதங்களும் துணையாகி, யாகசாலையில் சிவாச்சாரியார் தன் ஆகம வழிபாட்டுத் திறனால் ஆகாசத்தில் இருந்து யாகசாலைக் குண்டத்தில், அக்கினி நெருப்பில் இறைவனுக்கு உயர்ந்த பொருட்களை ஆகுதி செய்து குவித்து, அந்த அக்கினியில் இருந்து கும்பத்தில் உள்ள அருள் நீரில் இறையாற்றலைக் குவித்து, கும்பித்த அருள்மிகு நீரால் கற்பகக் கிரகத்தில் (மூலவர்) அபிஷேகமாக கும்பிக்கும் **அருள்மிகு கும்பாபிஷேகம் ஆகும்.**

**"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிச் சிறந்ததுவே"**

இறைவனைத்தாங்கிநிற்கும் ஆலயமும் அவரை உணர்ந்து கொள்ள உதவும் பூசை ஆராதனை மந்திரங்களும் திருமுறைகளும் எவ்வாறு உலகை வாழ வைக்கிறதோ அதேபோன்று தான் நாம், வாழும் இல்லங்களும்.

பிணியைக் (பிறவிப்பிணி) கொள்ளும் உடலை விட்டு நீங்க திருமுறைகளை ஓதி வேம்படிப்பிள்ளையாரின் மகா கும்பாபிஷேகம் கண்டு நிறைவாகிய இம்மையிலும், மறுமையிலும் பெருவாழ்வு பெறுவோம்.

**"ஓம் கணபதியே நம"
பிள்ளையார் அருள்மிகு 21 விரத நாட்களில்
மகா கும்பாபிஷேகம் காண்பது
கோடி புண்ணியம்.**



**க.கு.க.சிவபாலன்,
பொருளாளர்,
அகில இலங்கைத் திருமுறைமன்றம்
போசகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.**

# இராசிபலன்

**09.12.2023
கார்த்திகை 23, சனிக்கிழமை
துவாதசி பின்னிரவு 6.14 மணிவரை
சித்திரை முற்பகல் 10.03 மணிவரை**

**சுபநேரம் -3.18-4.48 மணிவரை
இராகுகாலம்-9.18-10.48 மணிவரை**

**சந்திராஷ்டமம்- ரேவதி.**

**வளவன்**


மேஷம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,உடல் நலன் சீராகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.


கடகம்

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.


துலாம்

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.


மகரம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள்,எண்ணிய காரியம் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்,செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


சிம்மம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.


விருச்சிகம்

பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

நேற்றைய பணியொன்று இன்னும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர் நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.


மிதுனம்

பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நன்மைகள் நாடி வரும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


கன்னி

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வாக்குமேன்மையுண்டு.


தனுசு

வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மீனம்

காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**நன்றி கெட்டவனுக்கு நன்மை செய்வது பன்னீரை கடலில் தெளிப்பதற்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டம்



(தருமபுரம்)
கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டதில் நெற்செய்கையில் கபில தத்திகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

கடந்த கால கூட்ட அறிக்கை, நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், கால போக பயிர்ச்செய்கை, துறை சார்ந்து தற்போது நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.(நி-5-6-316)



வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை "பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற பசுமையான அழகான பிரதேசத்தை கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

# தரமற்ற 30 ஆயிரம் கிலோ சீனி திருப்பி அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு 80 ஆயிரம் கிலோ சீனி அனுப்பப்பட்டிருந்தது. அதில் தரமற்றதாகக் கரு தப்படும் 30 ஆயிரம் கிலோ சீனி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள் ளது.

சீனியின் தாராதரம் பார்வையிடப்பட்ட பின்னர் வடக்கிற்கு குறித்த நிறுவனத்தால் 80 ஆயிரம் கிலோ சீனி அனுப்பிவைக்கப்பட்டது.

அதில் தரமற்ற சீனியாக அடையாளம் காணப்பட்ட 30 ஆயிரம் கிலோகிராம் சீனி மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களிற்கு தரமான பொருட்கள் மாத்திரமே வழங்கப்படும். கூட்டுறவு சங்கத்தினர் தரமற்ற சீனியை திருப்பி அனுப்பியது நல்ல விடயமாகும் எனத் தெரிவித்தார்.

வட மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனியை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும். அத்துடன் கிடைக்கும் சீனியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 280 ரூபாவிற்கு மக்களிற்கு வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100)

# சர்வதேச மனித உரிமைகள் தினம்

(யாழ்ப்பாணம்)
2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயமானது "Dignity, Freedom, and Justice for All" எனும் தொனிப் பொருளிலான நிகழ்வானது எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 09.45 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை யாழ்.டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (நி-5-6-33)

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்திலிருந்து 2023.11.30 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் வாகன இலக்கத்தகடுகளை பார்வையிட முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# வழுக்கையாறு மயானத்தில் இரும்புத் தூண்கள் திருட்டு

## பூதவுடல் எரிப்பதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை வழுக்கை யாறு இந்து மயானத்தில் 6 இரும்புத்தூண்கள் அண்மை யில் களவு போன சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வழுக்கையாறு இந்து மயா னத்தில் பூதவுடல் வைக்க அமைக்கப்பட்டிருந்த இரும்புத் தூண்களே இவ்வாறு களவு போயுள்ளது. இதனால் பூதவு டல் எரியூட்டலில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மயானத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்ககளும் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி மீள் அறிவித்தல்-2024**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.12.2023 தொடக்கம் 22.12.2023 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 27.12.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 27.12.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. தலைமை அலுவலகம்

**பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மரக்கறி மற்றும் மீன்சந்தை | 1,920,615.00 | 38,000.00 | 2,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக்கடை | 75,500.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 03 | கோழி இறைச்சிக்கடை | 83077.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 27.12.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
5. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை அன்றையதினமே செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 08 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
6. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
7. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
9. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தயானந்தன் தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**
(c-7052) **09.12.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 60,60A, சாந்தைப்பிள்ளையார் வீதி, வட்டாரம்-11

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -11, சாந்தைப்பிள்ளையார் வீதியிலுள்ள இல:60/60A ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.
பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை இராமலிங்கம் அம்பலவாணர் ஆகியவர் முதலாம் பகுதியாகவும் இராமலிங்கம் பொன்னுத்துரை ஆகியவர் இரண்டாம் பகுதியாகவும் பிரசித்த நொத்தாரிசு வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10872/12.07.1972ஆம் இலக்க பிரிவிடல் உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் குறித்த ஆதனங்களுக்குரிய அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடாது குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.
மேற்படி பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை அம்பலவாணர் இரங்கநாதன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10873/12.07.1972ஆம் இலக்க உறுதியால் குறித்த இராமலிங்கம் அம்பலவாணர் ஆகியவரிடமிருந்து அழியா நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.
**அம்பலவாணர் குருபாததாசர்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6479/09.10.2004ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் இரங்கநாதன்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.
**ஸ்ரீபன் டிசாந்தன் பெண் நிவேதிகா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14873/19.10.2013ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் குருபாததாசரும்** பெண் கௌரியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.
குறித்த **ஸ்ரீபன் டிசாந்தன் பெண் நிவேதிகா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.
இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **ஸ்ரீபன் டிசாந்தன் பெண் நிவேதிகா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (18139)

**குருவே துணை**

**வாழ்க வையகம்**



**வாழ்க வளமுடன்**

**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

**யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில் பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும் மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப் பயிற்சிகள்**

- உடல் நலத்திற்கு ⇒ எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு ⇒ சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு ⇒ தியானப்பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு ⇒ அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட ⇒ தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம்: 09.12.2023 சனிக்கிழமை தொடக்கம்**
**15.12.2023 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்: மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை**

**தலைமையுரை: - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)**

**அறிமுகவுரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி K.செல்வகுமார் மற்றும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி ஹரிகரன் அவர்கள்**

(சி-7856)

**தொடர்புகளுக்கு**
**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல. 81, பிறவுன் வீதி கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில் யாழ்ப்பாணம்.**
**தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745.**

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18 (பழைய வட்டாரம் 08), கொழும்புத்துறை வீதி, ஆதன இல77/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் க.சிற்றம்பலம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கனகநாயகம் சண்முகநாயகம் அவர்கள் 29.06.1968 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.C. மகாதேவா முகதாவில் 4388ஆம் இலக்க நிறைவேற்றுகை உறுதி மூலம் குமாரசாமி சர்மாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தற்போது இந்தியாவில் வசிக்கும் விஜயன் பெண் துஷித்தாவும் தமது அற்றோனி தத்துவகாரர் தியாகராஜசர்மா உமாசுதன் மூலமும் வெளிப்பட்டும் சின்னச்சாமி தர்மலிங்கம் பெண் துஷ்யந்தியும் தியாகராஜசர்மா உமாசுதனும் பெண் காயத்திரியும், குமாரசாமி குருக்கள் காண்டீபனும் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 14.10.2020 ஆம் திகதியிடப்பட்ட 676 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யோகலிங்கம் ஜெயபாலசிங்கத்திற்கு பெண் செல்வவனிதாவிற்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை:-

"பெரியபுலம் புளியடிஓடை பெரியபுலமும் வளவும் அல்லது சொக்கினிபிள்ளை வளவு" நில.பர.2ஆம் கிணறும் பயிர்வகைகளும் தற்போது உத்தரவு பெற்ற உலாந்தா P. புஸ்பராஜா என்பவரால் 06.03.2020 இல் அளந்து தயாரித்த 6654ஆம் இல படத்தின்படி நில.பர.1 குளி 16.79 இப்பாகம் குறித்த படத்தில் துண்டு 01 என சுட்டப்பட்டுள்ளது.
நில.பர.ஒன்று குளி பதினாறு தசம் ஏழு ஒன்பதுக்கும் எல்லைகள்

கிழக்கு: 1190ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 02 என காட்டிய பாகம்.
வடக்கு: ஒழுங்கை .
மேற்கு: சிவஞானபோதம் பெண் பிறேமாவின் ஆதனம்.
தெற்கு: 1190ஆம் இல படத்தில் துண்டு 04 என சுட்டிய பாகம் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை யோகலிங்கம் ஜெயபாலசிங்கமும் பெண் செல்வவனிதா என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது யோகலிங்கம் ஜெயபாலசிங்கமும் பெண் செல்வவனிதா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (சி-7843)

## 2 ஆம் கட்ட இலவச யூரியா உர விநியோகம்

(கரணவாய்)
Japan FAO உதவித் திட்டத்தில் 30 பரப்பிற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 25 கிலோ யூரியாவிற்கு மேலதிகமாக 25 கிலோ யூரியாவினை 2 ஆம் கட்டமாக இலவச யூரியா உர விநியோகம் இடம்பெறவுள்ளதாக கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே 25 கிலோ யூரியாவினை இலவசமாகப் பெற்றவர்கள் நாளை மறுதினம் முதல் 15 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும்.

இலவச யூரியா உரத்தினை பெற வரும்போது தங்களுக்கு வழங்கப்பட்ட வயல் காணி இலக்கம். ஏக்கர் வரி பற்றுச்சீட்டு மற்றும் சந்தா பண பற்றுச்சீட்டு என்பவற்றைக் கொண்டு வருமாறும் கரவெட்டி கமநல சேவைகள் நிலையம் அறிவித்துள்ளது. (நி-5-6-60)





மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா திருப்பலி நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.
(படங்கள்-யோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தொழிற்சாலையில் பாரிய வெடிப்பு 4 இந்தியர்கள் உயிரிழப்பு

### சீசெல்ஸில் அவசரநிலை பிரகடனம்



(விக்டோரியா)

சீசெல்ஸ் நாட்டின் பிரதான தீவான மாஹேவில் உள்ள தொழிற்துறை பகுதியில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு மற்றும் வெள்ளம் காரணமாக அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு காரணமாக வணிக கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளதுடன், அருகிலுள்ள வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. சம்பவத்தில் நான்கு இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

எவ்வாறாயினும், சீசெல்ஸ் நாட்டில் தங்கியுள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், அவர்கள் மாற்று இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அத்தியாவசியத் தொழிலாளர்களைத் தவிர மற்ற அனைவரையும் வீட்டிலேயே இருக்குமாறு சீசெல்ஸ் ஜனாதிபதி வேவல் ராம்கலவன் உத்தரவிட்டுள்ளார். சம்பவத்தில் ஏராளமானோர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் பலர் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை கட்டுமான நிறுவனத்தில் இருந்த மின்பிறப்பாக்கி ஒன்று வெடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக கட்டடத்தின் அருகில் நான்கு கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சி.சி.சி.எல் வெடிபொருட்கட்ளும் வெடித்து சிதறியுள்ளன.

சர்வதேச விமான நிலையம் சம்பவ இடத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் இருந்தாலும் அங்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஒரே இரவில் பெய்த கனமழையால் கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதன்போது வீடுகள் இடிந்தமையால் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம் காரணமாக கழிவுநீர் கடலில் கலப்பதால் மக்கள் கடலில் நீராட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ராம் கலவன், இந்த இரட்டை பேரழிவுகளை நாட்டிற்கு "பேரழிவு" என்று தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ஐ.நா பொது

## உலக அ




காசாவில் இடம்பெறும் மனித பேரழிவுகளை தடுத்து நிறுத்த உடனடி யுத்த நிறுத்தம் அவசியம் என ஐ.நா பொதுச் செயலர் உலக நாடுகளை வலியுறுத்தியிருந்த நிலையிலேயே இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

முன்னதாக குட்டரெஸ் ஐ.நாவின் பாதுகாப்பு அவை உறுப்பினர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தனது பிரிவு 99-ஐ பயன்படுத்தி உறுப்பு நாடுகளை எச்சரித்திருந்தார்.

பிரிவு-99 என்பது ஐ.நாவின் பொதுச் செயலர், உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து

## காசா தாக்குதல்களில் அமெரிக்க ஆயுதங்கள்

### சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு




(ஜெனிவா)

காசாவில் ஒக்டோபரில் இடம்பெற்ற தாக்குதலொன்றிற்கு அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

43 பொதுமக்கள் கொல்லப்பட்ட தாக்குதலில், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட துல்லியமாக இலக்கைத் தாக்கும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக தனது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புசசபை தெரிவித்துள்ளது.

காசாவின் மத்தியில் உள்ள டெய்ர் அல் பலாவை சுற்றியுள்ள பகுதிகளில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களிற்கான வெடி பொருட்கள் காணப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் அமெரிக்காவின் பல ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் பயன்படுத்துகின்றது எனினும் குறிப்பிட்ட ஒரு தாக்குதலுடன் அமெரிக்காவின் ஆயுதங்களிற்கு தொடர்புள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தொடர்புபடுத்தியிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமேசான் காடுகளில் சட்டவிரோதமாக செயற்பட்ட 19 தங்கச் சுரங்கங்கள் தகர்ப்பு

(வோஷிங்டன்)

அமேசான் காடுகளில் சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த 19 தங்கச் சுரங்கங்கள் வெடி வைத்து தகர்த்தப்பட்டுள்ளன.

அமேசான் மழைக்காடுகளில் தங்கங்களை பிரித்து எடுப்பதற்காக பல்வேறு சட்டவிரோதமான தங்க சுரங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த தங்கச் சுரங்கங்களில் இருந்து மட்டும் சுமார் 1.5 மில்லியன் டொலர் அளவிலான தங்கம் பிரித்து எடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆனால் இவ்வாறு சட்டவிரோதமாக செயற்படும் தங்கச் சுரங்கங்கள், தங்கத்தை பிரித்து எடுப்பதற்காக பாதரசம் மூலம் ஆறுகளில் சுத்திகரிப்பு வேலையை செய்கின்றன.



இதனால் குடிநீர் வளமான ஆறு முற்றிலும் மாசுபடுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டு வந்ததை அடுத்து, கொலம்பிய ஆயுதப்படை அமேசான் காட்டுக்குள் சோதனை வேட்டை நடத்தினர்.

இந்த சோதனையின் இறுதியில் அமேசான் காடுகளில் சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த 19 தங்கச் சுரங்கங்களை கண்டுபிடித்தனர்.

பின், பிரேசிலும், அதனுடன் சேர்ந்த கூட்டு முயற்சியில் சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த 19 சுரங்கங்களையும் வெடி வைத்து தகர்த்து இருப்பதாக கொலம்பியா அரசு தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துச் செயலரின் பதவிக்காலம் ...மைதிக்கு ஆபத்தானது

## இஸ்ரேல் சீற்றம்



**(ஜெருசலேம்)**

**ஐ.நா பொதுச் செயலர் அன்டோனியா குட்டரெஸின் பதவிக்காலம் உலக அமைதிக்கு ஆபத்தை விளைவிக்கும் என இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.**

விளைவிக்கும் என அவர் கருது கிற விவகாரத்தைக் குறிப்பிட பயன்படுத்தும் சாசன உரிமை யாகும்.

"சர்வதேச அமைப்பு, மொத்த ஆற்றலையும் உபயோகித்து போரைத் தடுக்க வேண்டியதும் இந்த நெருக்கடி நிலைக்கு முடிவுகட்ட வேண்டியதும் அதன் பொறுப்பாகும்" என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குட்டரெஸின் இந்த நட வடிக்கை ஹமாஸை ஆத ரிப்பதற்கும் அவர்களின் கொடூரமான தாக்குதலை அங்கீகரிப்பதற்கும் சமம் என இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் எலி கோஹன் தெரிவித்துள் ளார்.

மேலும், பிரிவு 99-ஐ அவர் செயற்படச் செய்தது மற்றும் போர் நிறுத்தத் துக்கான அழைப்பு ஆகி யவை ஹமாஸ் அமைப பிற்கான ஆதரவைக் காட்டு கிறது.

முதியவர்களை கொலை செய்தது, குழந்தைகளைக் கடத்தி சென்றது ஆகியவற் றுக்கும் சேர்த்தே அவர் ஆதரவு அளிக்கிறார். அவ ரது பதவிக்காலம் உலக அமைதிக்கு ஆபத்தா னது எனத் தெரிவித்துள் ளார்.

2017 இல் பொதுச் செயல ராகப் பதவியேற்றதில் முதல் முதன்முறையாக குட்டரெஸ் பிரிவு 99-ஐ பயன்படுத் தியுள்ளார். மிக நெருக்கடி யான காலத்தில் மட்டுமே இந்த பிரிவு பயன்படுத் தப்படும். இதற்கு முன்பு 1971 இந்தியா- பாகிஸ்தான் போரின்போது ஐ.நாவின் அப்போதைய பொதுச் செய லர் இந்த உரிமையைப் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மக்களை எதிரியின் கரங்களை நோக்கித் தள்ள வேண்டாம்

## இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுக்கும் அவுஸ்திரேலியா

(கன்பரா)

காசா மக்களை எதிரி யின் கரங்களிற்குள் தள்ளும் விதத்தில் இஸ்ரேல் செயற் படக்கூடாது என அவுஸ்தி ரேலிய வெளிவிவகார அமை ச்சர் பெனிவொங் எச்சரித்துள் ளார்.



காசாவில் பொதுமக்கள் பாது காப்பான இடங்கள் என செல் வதற்கான இடங்கள் மிகக் குறைவு என்பதையும் இஸ் ரேலினதும் பாலஸ்தீனத் தினதும் எதிர்காலம் நியா யமான நிரந்தர சமாதானத் திலும் இரண்டுதேசங்கள் தீர்விலும் தங்கியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் தற் போதைய சூழ்நிலை அனை வருக்கும் தோல்வியாக காண ப்படுகின்றது எனவும் குறிப்பிட் டுள்ளார்.

சமீபத்தைய மோதல் இடைநிறுத்தம் முடி விற்கு வந்துள்ளதை பாரிய பின்னடைவு என அவுஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் தெரி வித்துள்ளார். (நி-5-6)

# விலங்குகளை விண்ணுக்கு அனுப்பிய ஈரான்

(டெஹ்ரான்)



விண்ணுக்கு மனிதர்களை அனுப்பும் முயற் சியில் ஈடுபட்ட ஈரான், தற்போது 500 கிலோ எடையுள்ள விலங்குகளைக் கொண்ட விண் கலம் ஒன்றினை விண்ணுக்கு அனுப்பியுள்ள தாகத் தெரிவித் துள்ளது.

இந் நிலையில் சுற்றுவட்டப் பாதையில் 130 கிலோ மீற்றர் தொலைவுக்கு அந்த விண்கலம் அனுப்பப்பட்டதாகத் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் இஸா சரேபூர் தெரிவித் துள்ளார்.

ஈரான் கடந்த 2013இல் விண்கலம் மூலம் குரங்கு ஒன்றினை வெற்றிகரமாக விண்ணுக்குச் சென்று வரச் செய்ததாகத் தெரிவித்தது.

இதேவேளை மனிதர்களை விரைவில் விண்வெளிக்கு அனுப்பும் முயற்சிகளை ஈரான் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிற்கு கறுவா ஏற்றுமதி

(கொழும்பு) உள்நாட்டு கறுவாப்பட்டைக்கு சீன சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றது. இதனால் வருடாந்தம் இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான கறுவாவை சீனாவிற்கு அடுத்த வருட தொடக்கத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்த ஏற்றுமதியானது நாட்டின் கறுவா சந்தைக்கு பெரும் அனு கூலமாகும் என கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக்க லிந்தர தெரிவித்துள்ளார். (நி-5-6)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப்பதிவாளர் பணி மனையில் 21.12.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரைபொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதானஉணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவகற்கைகள் மற்றும் வணிகபீடஉணவகம் | கலாசாலைவீதி,திருநெல்வேலி. |
| மருத்துவபீடஉணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவமாணவர் விடுதிஉணவகம் | யாழ்ப்பாணம் |
| சேர்.பொன்.இராமநாதன் அவைகாற்றுமற்றும் காண்பியபீடஉணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமிமாணவர் விடுதிஉணவகம் | திருநெல்வேலி |
| சித்தமருத்துவஅலகுஉணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000276 இற்கும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப் பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசிஇல 021 222 6716) பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்** (ரி-7849) **08.12.2023**


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1200 |
| தக்காளி | 700 | 700 | 750 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 150 | 150 |
| கோவா | 400 | 400 | 400 | 500 |
| கரட் | 350 | 480 | 450 | 500 |
| பூசணி | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 300 | 300 | 220 | 350 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 280 | 300 |
| பாகற்காய் | 700 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 450 | 400 | 450 |
| லீக்ஸ் | 300 | 380 | 350 | 400 |
| பீற்றூட் | 250 | 500 | 500 | 600 |
| கறிமிளகாய் | 700 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1800 | 600 | 1600 |
| போஞ்சி | 500 | 480 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 480 | 480 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 800 | 800 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 500 | 550 | 500 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 200 | — | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 100 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 150 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2984

வின்சன்




நித்தீஸ்




வதனா




தமிழினி




ராயு




மதி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தபுரம் திருட்டுச் சம்பவம் சந்தேகநபர்கள் மூவர் கைது

## சான்றுப் பொருட்கள் மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் திருடப்பட்ட நகைகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 29.11.2023 அன்று 860, 000 பெறுமதியான தங்க நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த களவு தொடர்பான விசாரணைகளுக்கமைவாக கிளிநொச்சி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றவிசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கருணரத்தினம் ஜசிந்தன் தலைமையிலான குழு குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்து இருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக தெரிவித்து கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் வசித்து வரும் கணவன் மற்றும் மனைவி இருவரையும் கைது செய்துள்ளதுடன் தங்க ஆபரணாங்கள்,ஐபோன் தொலைபேசி ஒன்று, 198,000 பணம் மற்றும் ஹெரோயின் 430மில்லி கிராம், மகேந்திரா வாகனம் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரையும் சான்றுப் பொருட்களையும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-100-316)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு-கிழக்கில் நாளை போராட்டம்

(முறிகண்டி)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை வடக்கு-கிழக்கில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி இவ்வாறு தெரிவித்து போராட்டத்துக்கு அழைப்பு விடுத் திருநதார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் 13 வருடங்களிற்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி வருவதுடன், நீதி கேட்டு போராடி வருகின்றோம். ஆண்டுகள் பல கடந்தாலும் நீதி இன்று வரை கிடைக்கவில்லை.

கிளிநொச்சியில் மருத்துவமனைக்கு அருகில் உள்ள எமது அலுவலகத்திற்கு முன் பாகவும் இடம்பெறும். குறித்த போராட்டத்திற்கு வர்த்தகர்கள், சிவில் அமைப்புக்கள் என அனைவரும் ஒத்துழைத்து எம்முடைய போராட்டத்துக்கு வலுசேர்க்க வேண்டும் என தெரிவித்தார். (நி-5-6-100)



மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான இயந்திர தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கண்காட்சி பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் பாடசாலை பொது ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: ஜோசப்நயன்)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 ஈச்சமோட்டை வீதி 52/16 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை விக்ரர் நேரியஸ் செவந்தா ஜோன்பிள்ளை, ஹயசிந் மாக்கிறேற் ஜிவேந்திராடேவிற் (யோன்பிள்ளை), அன்ரோனியஸ் டினேஸ் யோன்பிள்ளை என்போர் பிரசித்த நொத்தாரிசு அப்பாத்துரை விநாயகமூர்த்தி முகதாவில் 2012.03.21 இல் 2160 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரண நெற்பரப்பு 33 அளவுடைய ஆதனத்தை தமக்கு சொந்தமானது என வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்குறித்த உரிமையாளர்கள் மூவரும் பிரசித்த நொத்தாரிசு வே.அப்பாத்துரை விநாயகமூர்த்தி முகதாவில் 2012.04.20 ஆம் திகதி 2168 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரண நெற்பரப்பு 31 குளி 0.96 அளவுடைய ஆதனத்தை துரைச்சாமி விஜயகாந்தன் என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி இல 252 ஐ சேர்ந்த துரைசாமி விஜயகாந்தன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 04.08.2012 ஆம் திகதி 9068 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரண நெற்பரப்பு 2 அளவுகொண்ட ஆதனத்தை லினோ கிறிஸ்தின் கிறிஸ்தோபர் என்பவருக்கு அறுதிவிற்றுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "வேலன் புலம் வயல்" உறுதிப்படி நெற்பரப்பு 31 குளி 0.96 ஆனால் நில அளவையாளர் டி.புஸ்பராஜா 13.03.2012 ஆம் திகதி தயாரித்த 3488 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 என சுட்டிய பகுதி நெல் பரப்பு 33 அதே நிலஅளவையாளர் 12.06.2012 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 3488 A நில அளவைப்படத்தில் குறித்த பகுதி துண்டு 1 தொடக்கம்.

14 வரை 14 துண்டாக காட்டப்பட்டபடி நிலப்பரப்பு 22 ஆகும். இதில் துண்டு 4 எனும் எண்ணால் சுட்டிய பகுதி நிலப்பரப்பு 2 இந்த நிலப்பரப்பு இரண்டிற்கும் எல்லை

கிழக்கு - துண்டு 6 என சுட்டிய ஆதனம்.
வடக்கு - துண்டு 3 என சுட்டிய ஆதனமும் துண்டு 14 என சுட்டிய பாதை முகப்பும்.
மேற்கு - காளின்யோன்பிள்ளையின் ஆதனம்.
தெற்கு - காளின்யோன்பிள்ளையின் ஆதனம்.

இதனடங்கலும் இன்னும் முழுக்காணியாலும் விடப்பட்டு முழுக்காணிக்குமாகவும் அமைக்கப்பட்ட பொதுப்பாதையான துண்டு 14 என்னும் எண்ணால் சுட்டிய பாதையால் பிரதான பாதைக்கு போக்குவரத்துச் செய்வதற்கு குறித்த பாதையில் பாவிப்புரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை லினோ கிறிஸ்டின் கிறிஸ்தோபர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெ்யர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது லினோ கிறிஸ்டின் கிறிஸ்தோபர் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-7845)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 குமாரசாமி வீதி 8 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை வேலுப்பிள்ளை தம்பியையாவும் மனைவி நாகரத்தினமும் கதிர்காமு வேலுப்பிள்ளையும் மனைவி தெய்வானையும் என்போர் பிரசித்த நொத்தாரிசு கி.துரைசிங்கம் முகதாவில் 1958.05.24இல் 9935 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 4 அளவுடைய ஆதனத்தை சின்னத்தம்பி செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

மேலும் நித்தியலட்சுமி தம்பையாவும் விக்னேஸ்வரன் தயாநிதிதேவியும் பிரசித்த நொத்தாரிசு V.பொன்னம்பலம் முகதாவில் 2017.07.17 ஆம் திகதி 1427 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 8.97 அளவுடைய ஆதனத்தை ஜெயகரன் தனலெட்சுமி என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

ஜெயகரன் இராமநாதன், ஜெயகரன் தனலட்சுமி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V.பொன்னம்பலம் முகதாவில் 01.06.2022 ஆம் திகதி 1678 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மற்றும் பிரசித்த நொத்தாரிசு அபர்னா ஜனார்த்தனன் முகதாவில் 14.06.2022 ஆம் திகதி 1441 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிகள் மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 1 குளி 8.97 அளவுகொண்ட ஆதனத்தை சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையளித்துள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடக்கு இறை யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட "செம்மண்கிடங்கு" கட்டடங்களும் செய்பயிர், வான் பயிர்களும், உறுதிப்படி நிலப்பரப்பு 1 குளி 8.97 நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் 15.05.2011 ஆம் திகதி தயாரித்த 4505/11 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 2 என சுட்டிய பகுதி. இந்த நிலப்பரப்பு 1 குளி 8.97 இற்கும் எல்லை.

கிழக்கு -பரமேஸ்வரியின் வாரிசுகளுக்குரிய ஆதனம்.
வடக்கு-நடராசாவின் வாரிசுகளுக்குரிய ஆதனம்.
தெற்கு-அம்பலவாணர் அருளானந்தத்தின் வாரிசுகளுக்கரிய ஆதனம்.
மேற்கு- துண்டு 1 என சுட்டிய பாகம்.

தற்போது இவ்வாதனத்தை சிவபூமி அறக்கட்டளை அமைப்பு தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவபூமி அறக்கட்டளை என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(சி-7846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 349





ளும் வரையில் இங்கேயே விட்டு வைக்கச் சொல்லுங்கள்!" என்றான் சேந்தன் அமுதன்.

"பாவம்! அந்த மாதிரி உனக்கும் பைத்தியம் பிடிக்கும் வரையில் இங்கேயே இருப்பேன் என்கிறாயா? அப்புறம் உன் தாயார் வாணியம்மையின் கதி என்ன?" என்று கூறிவிட்டு இளைய பிராட்டி அங்கிருந்து புறப்பட, மற்றவர்களும் சென்றார்கள்.

அரை நாழிகை நேரத்துக்கெல்லாம் சில சேவகர்கள் வந்து சேந்தன் அமுதனைப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்து தஞ்சைக் கோட்டை வாசலில் கொண்டு போய் விட்டார்கள்.

கோட்டைத் தலைவரிடம் சொல்லி உன்னை விடுதலை செய்யப் பண்ணிவிட்டு மறுகாரியம் பார்க்க வேண்டும் என்றாள் குந்தவை.

"தாயே! அப்படிச் செய்ய வேண்டாம்! அடுத்த அறையில் ஒரு மனிதன் இருக்கிறான். அவன் என்னிடம் தினம் நூறு தடவை 'நீ எனக்கு ஒரு பாட்டுச் சொல்லிக் கொடு! சொல்லிக் கொடுத்தால் பாண்டிய குலத்து மணி மகுடத்தையும் மாலையையும் இலங்கையில் எங்கே ஒளித்து வைத்திருக்கிறேன் என்று தெரிவிக்கிறேன்' என்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்த இரகசியத்தை நான் தெரிந்து கொள்

### இருபத்துமூன்றாம் அத்தியாயம்
### நந்தினியின் நிருபம்

அன்று மாலை நந்தினி லதா மண்டபத்தில் ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் அமர்ந்து நிருபம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தாள். சில வரிகள் தான் எழுதினாள். எழுதும் போது சில சமயம் சுழற் காற்றில் இளங்கொடி நடுங்குவதுபோல் அவள் உடம்பு நடுங்கிற்று. அடிக்கடி நெடு மூச்சு விட்டாள். அந்தக் குளிர்ந்த வேளையில் பக்கத்தில் தாதிப் பெண் நின்று மயில் விசிறியால் விசிறிக் கொண்டிருந்தும் அவளுடைய பளிங்கு நெற்றியில் முத்து முத்தாக வியர்வை துளித்திருந்தது. அவள் எழுதிய நிருபமாவது:

"அரசிளங்குமரா! தயங்கித் தயங்கி, பயந்து பயந்து, இந்த நிருபம் எழுதத் துணிந்தேன். இராஜ்யத்தின் நிலைமையைப் பற்றிப் பலவிதமான செய்திகள் காதில் விழுகின்றன. தாங்கள் எதையும் கவனிப்பதில்லை. நோயினால் மெலிந்திருக்கும் தங்கள் தந்தை பலமுறை சொல்லி அனுப்பியும் தாங்கள் தஞ்சைக்கு வரவில்லை. இதற்குக் காரணம் நான்தானோ என்ற எண்ணம் என்னை வதைக்கிறது. தங்களை ஒருமுறை சந்தித்தால் எல்லாச் சந்தேகங்களையும் போக்கி விடுவேன். அதற்குத் திருவுளம் இரங்குவீர்களா? தஞ்சைக்கு வர விருப்பமில்லா விட்டால், கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சந்திக்கலாம். நான் இன்று தங்கள் பாட்டியின் ஸ்தானத்தில் இருக்கிறேன். நாம் சந்தித்துப் பேசுவதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? இதைக் கொண்டு வரும் வீர இளைஞர், சம்புவரையர் குமாரரைத் தாங்கள் பூரணமாக நம்பி அவரிடம் எந்தச் செய்தியும் சொல்லி அனுப்பலாம் இங்ஙனம், துரதிர்ஷ்டத்துடன் கூடப் பிறந்த அபாக்கியவதி நந்தினி."

உண்மையிலேயே தயங்கித் தயங்கி, யோசித்து யோசித்து, மேற்கூறிய நிருபத்தை எழுதிய பிறகு, விசிறிக் கொண்டிருந்த தாதிப் பெண்ணைப் பார்த்து, "போடி! போய்க் கடம்பூர் இளவரசரை உடனே அழைத்து வா!" என்றாள் நந்தினி.

தாதி சென்று கந்தன் மாறனை அழைத்து வந்து விட்டு விட்டுச் சற்று விலகிப் போய் நின்றாள்.

கந்தன்மாறனின் கண்கள் நந்தினியை ஏறிட்டுப் பார்ப்பதற்குக் கூசின. எங்கேயோ தோட்டத்தைப் பார்த்த வண்ணம் கந்தன் மாறன் நின்றான். "ஐயா! உட்காருங்கள்!" என்று கூறிய நந்தினியின் குரல் நடுக்கம் கந்தன்மாறனை அவளுடைய முகத்தை உற்றுப் பார்க்கும்படி செய்தது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## சிறந்த ஆயுதம்

(நேற்றைய தொடர்ச்சி..)



"வெறும் பிதற்றல்! நீ ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்போது உன் மூளை எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கிறேன்." என்று அக்பர் கிண்டல் செய்ய, சபையோர் அவருடன் சேர்ந்து பீர்பாலை எள்ளி நகையாடினர். "சமயம் வரும்போது நான் கூறியது உண்மை என்று நீங்களே தெரிந்து கொள்வீர்கள்." என்றார் பீர்பால்.

மறுநாள், அக்பர் சில பிரமுகர்களுடன் நதிக் கரையில் உலவிக் கொண்டிருந்தபோது, பீர்பாலும் உடனிருந்தார். அப்போது ஒரே கூச்சலும் கூக்குரலும் கேட்க, மக்கள் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர். சக்கரவர்த்தியைக் கண்ட அவர்கள் ஓடோடி வந்து, "பிரபு! ஆபத்து! அபாயம்! பட்டத்து யானைக்கு திடீரென மதம் பிடித்து விட்டது.

அது இந்தப் பக்கம் தான் ஓடி வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உடனே ஓடி விடுங்கள்." என்று கூச்சலிட்டனர். அவர்கள் கூறி முடிப்பதற்குள் தொலைவில் மத யானை ஓடி வருவது தெரிந்தது.

உடனே, அக்பர் தன் இடையிலிருந்து [illegible] உருவ, கூடியிருந்த [illegible] வரும் தங்கள் வாட்களை உருவிக் கொண்டனர். ஆனால், மதம் பிடித்த யானையை வாள் கொண்டு சமாளிக்க முடியாது என்று உணர்ந்ததும் அவர்கள் திக்பிரமை பிடித்து சிலைகளாக நின்றனர். தன்னைப் பெரிய ஆபத்து எதிர் நோக்கியிருக்கிறது என்பதை அக்பரும் உணர்ந்தார்.

வாளினாலோ, ஈட்டி [illegible] என்று தெரிந்தது. ஆனால் கோழையைப் போல் பயந்து ஓடவும் அவருடைய தன்மானம் இடம் தரவில்லை. எல்லோரும் செய்வதறியாது செயலற்று நிற்க, பீர்பால் சட்டென்று அங்கிருந்த ஒரு பூனையைப் பிடித்து யானையின் முதுகில் வீசியெறிந்தார். யானையின் முதுகில் விழுந்ததால் மிரண்ட பூனை, தன் நகங்களினால் யானையைப் பிறாண்டியது.

வலி பொறுக்க முடியாத யானை, தன் தும்பிக்கையினால் பூனையைப் பிடிக்க முயல, அது தப்பித்துக் கீழேயிறங்கி ஓடியது. யானையின் கோபம் முழுவதும் பூனையின்பால் திரும்ப, அது பூனையைத் துரத்திக் கொண்டே எதிர்த்திசையில் ஓடியது.

தனது பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு யானையினால் விரைவாக ஓட முடியவில்லை. போக்குக் காட்டிக் கொண்டே ஓடிய பூனை, சாலையோரப் புதர்களின் உள்ளே மறைய, யானை புதர்களுக்குள் புகுந்து அதைத் தேடியது. இவ்வாறு, யானையின் கவனம் திசை திரும்ப, அக்பரும் மற்றவர்களும் யானையிடம் சிக்காமல் தப்பித்தனர்.

சற்றுநேரம் சிலையாய் நின்ற அக்பர் தெளிவடைந்தவுடன் பீர்பாலைக் கட்டித் தழுவிக் கொண்டார். "பீர்பால்! சபாஷ்! அறிவு தான் சிறந்த ஆயுதம் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டாய். சூழ்நிலைக்கு ஏற்றவாறு மூளையைப் பயன்படுத்தி சிந்தித்து செயற்படுவதே சாலச் சிறந்தது என்ற உண்மையை எங்களுக்குப் புரிய வைத்து விட்டாய். நீ சொன்னதே சரி. உன்னைப் போன்ற அறிவாளி அருகிலிருந்தால் எந்த அபாயத்தையும் எதிர்கொள்ளலாம்." என்று மனதாரப் பாராட்டினார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையே உள்ள அந்த ஒன்றுதான் கெட்டது.

*– ஸ்பானியப் பழமொழி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நெல் விதைத்தவர்கள் படும் பாடு காணீரோ!

எமது நாட்டில் விவசாயம் வீழ்ச்சிக்குரியதாக மாறிவிட்டது. ஒரு காலத்தில் எருதுகளின் துணையுடன் கலப்பை கொண்டு வயல் உழுது நெல் விதைத்து அறுவடை செய்து சூடடித்து நெற்தானியத்தை வீட்டில் அடுக்கி வைத்த பரம்பரையில் வந்த நாம் இன்று விதை நெல்லுக்கும் கிருமிநாசினிக்கும் இரசாயன உரத்துக்கும் ஆலாய்ப் பறப்பதைக் காணும்போது வேதனை தாள முடியவில்லை.

உண்மை. அன்று எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நேரத்தில் எங்கள் மூதாதையர்கள் இயற்கைப் பசளையில் விளைவித்த நெல்லுக்கு இன்று ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு சமகால வேளாண் செய்கை வந்துவிட்டது.

ஆம், விதை நெல்லுக்காக கையேந்துகின்ற பரிதாபம் ஒருபுறம்.

மறுபுறத்தில் உரத்திலும் கிருமிநாசினியிலும் விளைந்த நெல்லை விதைக்க, முளைத்த நெற்பயிர்களில் புதுப்புது நோய்கள் தாண்டவமாடுகின்றன.

அந்தவகையில் இம்முறை பெரும்போக நெற்செய்கையாளர்கள் நெற்பயிர்களில் ஏற்பட்டுள்ள நோய்கள் காரணமாக மிகுந்த கஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

தவிர, நோய் எது என்று தெரியாமல் நோயின் அறிகுறிகளை; கிருமிநாசினிகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களிடம் கூற, அவர்கள் தங்களிடம் இருக்கக்கூடிய மருந்துகளைச் சிபார்சு செய்ய, மருந்தும் மருந்தடித்த கூலியும் சேர்ந்து விவசாயிகளைப் பெரும் நட்டத்துக்கு ஆளாக்குகின்றன.

உண்மை. நோய்க்கான மருந்தை விவசாயத் திணைக்களங்கள் முன்வைப்பதில்லை. இதனால் எந்த பயனுமற்ற மருந்துகளை வாங்கி விசிறுகின்ற மிக மோசமான நிலைமைக்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர்.

சுருங்கக்கூறின் இந்த வருடத்துப் பெரும்போக நெற்செய்கையை எடுத்துக் கொண்டால், ஆரம்பத்தில் மழை இல்லாத நிலைமை, பின்னர் முளைக்கவிடாத மழை வெள்ளம், அதுதான் என்றால், முளைத்த நெற்பயிர்களை தாக்குகின்ற மடிச்சுக்கட்டி நோய். அதற்கும் மருந்து தேடினால், எரிபந்த நோய் பின்தொடர்கிறது.

அந்தோ! என் செய்வது. மானியத்து உரத்திலேயே நோய் இருக்கிறது என்று விவசாயிகள் கதைக்குமளவில்தான் எங்கள் விவசாய ஊக்குவிப்புகள் இருக்கின்றதெனில் எங்ஙனம் வேளாண்மை உச்சமடையும்.

ஆக, இதேநிலைமை நீடிக்குமாயின் நெல் விதைப்பதைவிட, அரிசி வாங்கி சோறாக்குவது சுகம் என்ற மனநிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும்.

இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டால், நெல் விளைந்த மண்ணெல்லாம் வானத்தை வெறுத்துப் பார்க்கும் பூமியாகிவிடும்.

எனவே நெற்பயிர்களில் ஏற்படுகின்ற நோய்கள் தொடர்பில் விவசாய உத்தியோகத்தர்கள் உடனுக்குடன் அவதானித்து அதுபற்றி விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இல்லையேல் பொருத்தமற்ற கிருமிநாசினிகளை விசிறி உள்ளதையும் இழப்பதாக விவசாயிகளின் கதை அமைந்துவிடும்.

## கொடிகாமம் பொலிஸ் பிரிவில் பணம், நகை கொள்ளை
### சந்தேகத்தில் மூவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி கிராமத்தில் கடந்த புதன்கிழமை இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதுடன் பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை நேற்று வெள்ளிக்கிழமை கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் வெள்ளாம்போக்கட்டியில் உள்ள தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை வழிமறித்த குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன் - இளைஞனது வீட்டுக்கும் சென்று பெறுமதியான பொருட்களை அடித்து சேதப்படுத்தியதுடன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் நகை ஆகியவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றிருந்தது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மூவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## மதுச்சாலைகள் திறக்கும் நேரங்களில் மாற்றம்

நாட்டில் இன்று முதல் மதுபானசாலைகளை திறக்கும் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சாதாரண தர மதுபானசாலைகளை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு சுற்றுலாத்துறை அனுமதி பெறாத மதுபானசாலைகள் முற்பகல் 10 மணி முதல் இரவு 11 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அனுமதி பெற்ற மதுபான சாலைகள் முற்பகல் 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ 1,700 சம்பளம்?

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும், தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ரூ.1,700 வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் அறியத்தருமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்டக் கம்பனி பிரதானிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் பிரகாரம் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தமது வேலைத்திட்டங்களை எவ்வாறு தயாரிப்பது என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ம-7)

நீதிமன்ற உத்தரவையடுத்து

## பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டி பரீட்சை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவையடுத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டி பரீட்சை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக, டிசம்பர் 16ம் திகதி நடாத்தப்படவிருந்த இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு I(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2023 கட்டம் 01, 02 க்கான பரீட்சைகள், குறித்த தினத்தில் நடாத்தப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ச.திருவாகரன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பரீட்சை நடாத்தப்படவுள்ள புதிய திகதி பற்றிய அறிவித்தல் மிக விரைவில் அறியத்தரப்படும். பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தமக்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டைகளையே புதிதாக தீர்மானிக்கப்படும் திகதியிலும் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்பதால், அவற்றைப் பாதுகாப்பாகப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றுள்ளது.

மாகாணங்களில் புதிய ஆசிரியர் சேவை நியமனங்களுக்கான போட்டிப்பரீட்சை நடத்தப்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடைக் கட்டளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் மானிப்பாய், கொமர்ஷல் வங்கி-மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி-மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய் ஞானம்ஸ் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கி (மின்சார நிலைய வீதி), LOLC, போதனா மருத்துவமனை அவசர பிரிவு, கமலேஸ்வரி, லதுசியாந்த் விடுதி, சிவராதா புடவையகம், ரொப்பாஸ் மற்றும் அன்னைநாகா பூட்சிற்றி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி சந்தி, பேருந்து நிலையம், மின்சார நிலைய வீதி, விக்டோரியா வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 66ஆம் பிரிவு இராணுவமுகாம்-பூநகரி, அரசபுரம் இராணுவ முகாம், பிரதேச செயலகம்-பூநகரி, 66ஆம் பிரிவு இராணுவ பயிற்சி பள்ளி-அரசபுரம், 4ஆவது மைல்கல்-பூநகரி, அரசபுரம், செல்லையா தீவு, ஞானிமடம், கௌதாரி முனை, காஞ்சிபுரம், கருக்காய் தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர், பூநகரி, நெடுங்குளம் பள்ளிக்குடா, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர்கடை சந்தி, பள்ளிக்குடா, கள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய், பரந்தன்நகரம், செம்மண்குன்று, சின்னபல்லவராயன்கட்டு, தம்பிராய், தரணிக்குடியிருப்பு, வாடியடி, வெட்டுக்காடு (கௌதாரிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
"பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும், பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவோம்"
"Create an atmosphere where Women & Girls feel Free and Secure".
JSAC
16
2023
யாழ் சமூக செயற்பாட்டு மையம்
Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை-புத்தூர் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையானது 2024 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள், வேலைகள் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு). |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள். |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள். |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற் வகைகள், வாணிஸ் மற்றும் கட்டுமானப் பொருட்கள். |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள். |
| A-09 | சுத்திகரிப்பு திரவங்கள், சுத்திகரிப்புபட பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைபொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை. |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள். |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள். |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள், சஞ்சிகைகள். |
| A-14 | கற்கள், மண் வகைகள், தார். |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-16 | அலங்காரப் பொருட்கள், தகரப்பந்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள். |
| A-17 | இரும்புப் பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள், அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-18 | பாதணிகள், மழைக்கவசம், கையுறை, முகக்கவசம். |
| A-19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள். |
| A-20 | அலுமினிய பிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-21 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள். |
| A-22 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள். |
| தொகுதி B | சேவைகள்/ வேலைகள் |
| B-01 | மரத்தளபாடங்கள, உருக்கு தளபாடங்கள் திருத்தம். |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணைபொருட்கள் திருத்தம். |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல். |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் . |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்புச் சேவையும் . |
| B-08 | கணனி பிறின்ரர் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும். |
| B-09 | பதிப்பக வேலை- சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும். |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், விளம்பரப் பலகை, லெமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | கட்டட அமைப்பும் திருத்த வேலைகளும். |
| B-12 | இரும்பு, கம்பிநெற், பிற்றிங் வகைகள், அலுமினிய பிற்றிங்குகள் தொடர்பான சேவைகள். |
| B-13 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் திருத்தம். |
| தொகுதி C | வாகன திருத்தமும் சுத்திகரிப்புச் செய்தலும் |
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகனச் சுத்திகரிப்பு /உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப்பெட்டி திருத்தம், குடிநீர் தாங்கி திருத்தம். |
| C-05 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம். |
| C-06 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு. |
| தொகுதி D | ஒப்பந்த வேலைகள் |
| D-01 | கட்டட நிர்மாணமும் திருத்தமும். |
| D-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும். |
| D-03 | கிணறு /குழாய்க்கிணறு அமைத்தல். |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| தொகுதி E | உணவு வகைகள் |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள். |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர்ப் போத்தல்கள். |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள். |

### நிபந்தனைகள்

1. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குநர்களும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். வழங்கல்கள் / சேவைகள் 2024 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ் வொன்றிற்கும் தனித்தனி விண்ணப் பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமை அலுவலகத் தில் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தொகுதி A, B, C, E ஆகிய வற்றுக்கு ரூபா.500.00 (VAT நீங்கலாக) உம், தொகுதி D இற்கு ரூபா. 2,000.00 (VAT நீங்கலாக) உம் செலுத்தி தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
4. அனைத்து விண்ணப்பப்படி வங்களையும் ஒரு கடித உறையி லிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024"** எனக் குறிப்பிட்டு **செயளாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்னும் முகவரிக்கு **29.12.2023** ஆம் திக திக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியா கவோ சமர்ப்பிக்கப்படல் வேண் டும்.
5. தேவையேற்படும் சந்தர்ப்பங் களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர் களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன், இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலை மனுக்களை கோருதல், கொள் வனவு செய்யும் உரிமை, வேறு பெறு கைச் செயற்பாடுகளை மேற் கொள்ளும் உரிமை சபையைச் சார்ந்தது.
6. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**இ. பகீரதன், செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
**021 205 8867**

(சி-7851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில்...

முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் பொலிஸார் 7 பேரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## பிரதான சந்தேக...

லான வழக்கு விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் வழக்கின் பிரதான சாட்சியான, கொலையான இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மன்றில் தோன்றி சந்தேக நபர்களை அடையாளம் காட்டினார்.

அதனைத் தொடர்ந்து நான்கு சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு நீதவான் நீடித்து உத்தரவிட்டதுடன், வழக்கினையும் அன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்தார். (ம-7,33)

## மீண்டும் முடங்...

தபால் தொழிற்சங்க முன்னணியினால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை மீண்டும் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள தபால் நிலையங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஏனைய பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

நெருக்கடிக்கு மத்தியில், நாட்டின் நிதித் துறையை ஸ்திரப்படுத்துவதற்காக இந்த சலுகைக் கடன் வழங்கப்படவுள்ளது.

இதனூடாக நாட்டின் வங்கிக் கட்டமைப்பு, நிதி கட்டமைப்பு, சிறு மற்றும் மத்திய தொழிற்றுறைகள் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## நல்லிணக்க...

உள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் இலங்கைப் பிரஜைகளின் முறைப்பாடுகள்தொடர்பாக உண்மையை உறுதி செய்யும் வகையில் நல்லிணக்கம், இழப்பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதே முன்மொழியப்பட்ட செயல்முறையின் முக்கிய நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மக்கள் எதிர்கொண்ட மோதல் சூழ்நிலைகளில் இருந்து மீள்வதற்கு அவசியமான ஒரு முக்கிய அங்கமான உண்மையைத் தேடுவதற்கு ஒவ்வொரு இலங்கையருக்கும் உள்ள மறுக்க முடியாத உரிமையை அங்கீகரிக்கும் வகையில் இந்த உத்தேச ஆணைக்குழு செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவம், சகிப்புத்தன்மை, பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டவும் வலுப்படுத்தவும் இந்த ஆணைக்குழு செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இனப் பிரச்சினை...

யினரால் மகாநாயக்க தேரர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

நாட்டுக்கு வருகை தந்துள்ள உலகத் தமிழர் பேரவையின் தலைவரான சுரேன் சுரேந்திரன் தலைமையிலான குழுவினர் நேற்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட உலகத் தமிழர் பேரவையின் தலைவரான சுரேன் சுரேந்திரன், நாட்டின் பிரச்சினைகளுக்கு அரசியல்தீர்வொன்று கிடைக்குமாக இருந்தால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்ளிட்டவர்கள் இலங்கைக்கு [illegible] கொள்ள தயாராகவே உள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

உலக தமிழர் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன், பவான் பவகுகன், வேலுப்பிள்ளை குகனேந்திரன், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கலாநிதி கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், கனடாவிலிருந்து ராஜ் தவரத்னசிங்கம், அமெரிக்காவிலிருந்து கலாநிதி ஜெயராஜா ஆகியோர் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்று கண்டி மல்வத்து மகாநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டனர்.

நாட்டில் நீடித்துவரும் இனப் பிரச்சினைக்கு, அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து தீர்வினை பெற்றுக் கொள்வது தொடர்பான யோசனைகளையும் இதன்போது இந்தக் குழுவினர் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்தனர்.

மேலும், நாட்டு மக்கள் அனைவரும் பெருமையுடனும், நம்பிக்கையுடனும், சம உரிமையுடனும் அமைதியாக வாழக்கூடிய வகையிலான யோசனைகளை உள்ளடக்கிய இலங்கையைப் பற்றிய இமயமலைப் பிரகடனம் தொடர்பாகவும் இவர்களால் விளக்கமளிக்கப்பட்டது. (ம-7)

## கரை...

மணிக்கு இடம் பெறவுள்ள இப் போராட்டத்திற்கு பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## அடுத்த...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான மகா சங்கத்தின் தேரர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் [illegible] இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இந்தநிலையில், தேர்தலின் பின்னர் அரசியலமைப்பு திருத்தங்கள் அல்லது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றை மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். (ம-7)


காணி விற்பனைக்கு
ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது. (18167)
077 307 5198
075 970 1948

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


லக்கி 7 VIP — திகதி 2023.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0148 — N 3 7 0 8 5 6 N

தன நிதானய — திகதி - 2023.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் - 1352 — M 03 35 76 77 M — Double Chance 16552

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3564 — சீட்டிழுப்பு திகதி 08.12.2023 — N 05 11 31 66 — N 19984

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.12.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0631 — சிம்மம் 14 26 33 43 சிம்மம் — 35572 — 02

மஹஜன சம்பத — திகதி 2023/12/08 — சீட்டிழுப்பு இலக்கம் 5322 — F 2 7 6 9 8 3

மெகா பவர் — திகதி 08/12/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1670 — A 20 31 61 73 79 — 00093

உத்தியோகபூர்வ முடிவுகள் — සුපිරි ධන සම්පත — திகதி 08.12.2023 — வெற்றி வாரம் 030 — J 3 0 1 3 8 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,365,135.20 — DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2296 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.12.08 — தினம் வெள்ளிக்கிழமை — 05 10 26 29 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,367,460/-

சனிதா — திகதி 2023.12.08 — வெற்றி வாரம் 4457 — வர்ணம் செம்மஞ்சள் — 04 21 68 73 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,229,328.00

சசிரி — வெற்றி வாரம் 412 — சீட்டிழுப்பு திகதி 2023.12.08 — பச்சை — 09 10 15 — 08 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,938,600/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4008 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.12.08 — தினம் வெள்ளிக்கிழமை — 05 13 53 58 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,377,504/-

ஜயஜய — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — J 06 02 24 54 64 — 1472 — 2023.12.08 வெள்ளி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 474,889,964.20

அத கோட்டிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2122 — சீட்டிழுப்பு திகதி : 2023.12.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,660,320/- — 07 11 36 49 E

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழர்களுக்கு...

நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக் கொடுத்துச் செயற்படவில்லை.

அதேபோல் பிற நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய நாட்டை நிர்வகிக்கப் போவதில்லை. சீனா, இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள் உட்பட சகல நாடுளுடனும் இணக்கமாகச் செயற்படுகின்றோம்.

தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழுங்க ப்பட வேண்டும். தமிழர்களுக்கு உரிமை வழுங்கப்படும் நிலையில் பிரிவினை வாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும்.

ஆகையால் எம்மால் இரு முனைகளில் இருந்து கொண்டு செயற்பட முடியாது. எனவே, ஒரு மித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சமவுரிமை வழுங்கப்படும். கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இலங்கையின் பிரதான நிலை நாடுகள் ஒத்துழைப்பு வழுங்கியுள்ளன.

பிணைப்படாதவெளி விவகாரக் கொள்கையால் தான் இந்த முன்னேற்றத்தை எம்மால் அடைய முடிந்துள்ளது என்றார். (ம-7)


### விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர் மற்றும் பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்க். என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917



(18149)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசவீதி சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோவிலுக்கு மேற்கு புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.

- நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உள்ள இடம்.
- வீடுகட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்திற்கும் உகந்த இடம்.

(18077)

**077 310 1357**

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோவிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (C-7848)

**077 948 4582**

### காணி விற்பனைக்கு

கீரிமலை மாதகல் வீதியில் கடற்கரை காணி 32 பரப்பு விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு (18144)

**077 147 6526**

### காணி விற்பனைக்கு

**நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(18131)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

### காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடி சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18154)

**071 173 3911, 076 853 5022, 076 213 7239**

### ENGLISH Grade 6 (2024)

Sat 9-10am Sun 9-10am

P.Tharmakumaran(P.MATHAN)
B.A(Eng.Lit), Dip.in.Eng., SLTES

NEWTON
NALLUR 077 792 3653

### கணிதம், வரலாறு
09 - O/L, A/L வகுப்புக்கள்

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். (18142)

**077 482 5438**

### A/L இரசாயனவியல் வகுப்புகள் (ஆங்கில, தமிழ் மொழி மூலம்)

தனிப்பட்ட, குழு வகுப்புகள்
Paper and Theory Classes
A/L, 2024, 2025 batches

**021 222 0446, 077 808 9814** (18152)

### உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7853)

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

### கார் வாடகைக்கு



**Altro, Renault**
கார்கள் வாடகைக்கு உண்டு (18164)

**077 332 2433**
யாழ்ப்பாணம்

### வேலையாட்கள் தேவை

- மேசன் (சம்பளம் 2,500/=)
- மேசன் உதவியாளர் (2,000/=)
- பெயின்ரர் (2,000/= - 2,500/=)

தேவைக்கேற்ப ஏனைய வேலைகளிலும் தம்மை ஈடுபடுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பு :காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை (18156)

**074 112 9148**

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு உதவிகள் செய்யக்கூடிய மற்றும் நான்கு வயது குழந்தையைப் பார்க்கக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் - சாவகச்சேரி (18163)

**077 700 2552**

### வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (18106)

### CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7853)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

### வேலையாட்கள் தேவை

- தொழில்நுட்ப அலுவலர் - T.O
- கணிய அளவையியலாளர் - QS (Bill செய்வதில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
- தொழில்நுட்ப அலுவலர், கணிய அளவையியலாளர் - (பயிலுனர்)
- அலுவலக உதவியாளர் (பெண்கள்)

தொடர்பு :காலை 8.00 மணி - மாலை 6.00 மணிவரை (18156)

**T.P : 074 112 9148**
E.mail:-royalbuilders@gmail.com

### Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 296/= (Max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 305/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg அரிசி மா | - 194/= |
| 400g அங்கர் பால்மா | - 1025/= ~~(1080/=)~~ |
| 750ml New V.S.P நல்லெண்ணை | - 1300/= ~~(1400/=)~~ |
| 70g Baby Soab | - 112/= ~~(145/=)~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= ~~(330/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(480/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |

3435/=



~~3900/=~~

(18165)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org